சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 225/2019

**PW 1 கல்யாணி** **10.10.2025**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

விபத்து எந்த இடத்தில் நடந்தது என கேட்டால் குஞ்சிபாளையம் பிரிவில் நடந்தது. விபத்து சமயத்தில் இறந்து போன நபர் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றுகொண்டிருந்தார் என்றால் சரிதான். அவர் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தார் என்று தெரியும் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்றார் விபத்தின் காரணமாக எனது கணவர் தலையில் அடிபட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். விபத்தில் சம்மமந்தப்பட்ட இன்னொரு வாகனம் என்னவென்றால் டாடா ஏஸ் வாகனம் ஆகும். அது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தது. விபத்தை நான நேரடியாக பார்க்கவில்லை விபத்தை கேள்விபட்டு தான் சாட்சி அளிக்கிறேன் விபத்தானது எனது கணவரின் கவனக்குறைவால் திடிரென்று சாலையின் வலதுபுறத்திற்கு திருப்பும் போது விபத்து நடந்தது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது கணவர் தலைகவசம் அணிந்திருந்தாரா என்றால் அணிந்திருந்தார் எனது கணவர் தலைகவசம் அணியாத காரணத்தினால் தலையில் அடிப்பட்டு இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. விபத்தை நேரடியாக யாராவது பார்த்தார்களா என்றால் பார்க்கவில்லை. எனது கணவர் என்ன வேலை செய்தார் என்றால் விவசாய கூலி வேலைக்கு சென்று கொண்டிருந்தார். விபத்து சமயத்தில் எனது கணவருக்கு 61 வயது என்றால் சரிதான். எனது கணவர் பெற்ற வருமானத்தை பொருத்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தானது எனது கணவரின் கவனக்குறைவால் நடந்த காரணத்தினால் இழப்பீடானது விகிதாச்சர அடிப்படையில் கழிக்கட வேண்டும் என்றால் சரியல்ல. எனது

கணவருக்கு நிலையான வேலை வருமானம் கிடையது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்தின் போது ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தில் 3ம் எதிர்மனுதார் இழப்பீடு தர தேவையில்லை என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. அதனால் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி